23rd August 1961]

ஆகையினுல், இந்த குறிப்பிட்ட காலத்திற்குள் இவ்வளவ விபத்துக்கள் நடத்ததைப்பற்றி, விவரீதமாகக் கனம் அங்கத்தினர் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை.

SRI S. K. SAMBANDHAN : அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, டிரைவர்கள் அஜாக்கிரதையாக ஓட்டுவதால், விபத்துக்கள் ஏற்படுகின்றன. அதனுல் ஒரு குறிப்பிட்ட ஆண்டுகள் டிரேயினிங் லைசன்சு பெற்றிருந்து மற்ற கார்கள், வாகன்கள் ஓட்டுகிறவர்களுக்குத்தான் பஸ், லாரி ஓட்டுவதற்கு லைசன்சு கொடுக்க வேண்டுமென்று ஒரு நிபந்தனை வைத்தால் நல்லதல்லவா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்போது வேண்டிய விதிகள் எல்லாம் இருக்கின்றன. அதன்படிதான் லைசன்சு கொடுக்கப்படுகிறது.

SRI T. P. SRINIVASAVARADAN : In the case of one of the accidents, a particular student who was standing with his cycle on the pavement was knocked down due to the lorry driver driving on the wrong side. The poor boy was immediately killed. May I know what action has been taken—whether the lorry driver was punished?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Of course, the lorry driver was at fault, and he was prosecuted. I do not know the particular result of the prosecution.

Electricity connections

* 252 *Q.*—DR. A. CHIDAMBARANATHAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) the names of municipal areas not electrified as on 30th September 1960; and

(*b*) the steps taken or proposed to be taken to electrify them?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Nil.

(*b*) Does not arise.

SRI M. ETHIRAJALU : சார், சில நகரசபைகளில் மின்சார விளக்குகள் போடப்பட்டிருக்கின்றன. நகரசபை எல்லைக்குள்ளாகவே ஓரத்தில் உள்ள தெருக்களில் இன்று வரை விளக்குகள் போடப்படவில்லை. அங்கெல்லாம் விளக்குகள் போடவேண்டுமென்று மின்சார இலாகா நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?

THE HON. SRI V. RAMAIAH : மின்சார இலாகா நடவடிக்கை எடுத்துக் கொள்வதைக்காட்டிலும் சம்பந்தப்பட்ட நகரசபைகள் அதற்கு வேண்டிய கோரிக்கைகளை கொடுத்து அதற்கு வேண்டிய திட்டங்கள் கொடுத்தால் மின்சார இலாகா அதைப் பரிசீலனை செய்து துரிதமாகப் போடுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளும்.

SRI M. ETHIRAJALU : கோரிக்கைகள் கொடுத்தாலும் திட்டங்கள் கொடுத்தாலும் நகரசபைகள் நிராகரித்துவிடுகின்றன. போதுமான பணவசதியில்லாத காரணத்தால் முடியாது என்று

[Sri M. Ethirajulu] [23rd August 1961

சொல்லிவிடுகிறார்கள். இதற்கு மின்சார இலாகா அவர்களை வற்புறுத்திப்போட்டுத்தான் ஆகவேண்டுமென்று சொல்ல முடியுமா ?

The Hon. Sri V. RAMAIAH : நகரசபையில் பணம் இல்லாவிட்டால், அதைக் கண்டுபிடிக்க வேண்டிய பொறுப்பு நகர சபையைச் சேர்ந்தது. அதை அவசியம் என்று கருதும் பட்சத்தில், வேறு செலவுகளைக் குறைத்துக்கொண்டு, இதற்கு முக்கிய மான இடம் நகரசபையில் கொடுக்க வேண்டும்.

Sri S. K. SAMBANDHAN : கடற்கரை ஓரப் பகுதிகளுக்கு விளக்கு வேண்டுமென்று கடலூர் நகரசபையிலிருந்து இரண்டு திட்டம் தயாரித்து கொடுக்கப்பட்டது. அது அரசாங்கத்தால் தடைபட்டு இருக்கிறது என்பது அமைச்சருக்குத் தெரியுமா ? அதற்குக் காரணம் என்ன ?

The Hon. Sri V. RAMAIAH : தனியாகக் கேள்வி கேட்டால் ஆராய்ந்து சொல்வேன்.

Low-income houses

* 253 *Q*.—Sri MOHAMED RAZA KHAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have stayed the allotment of low income houses by the Corporation of Madras; and

(*b*) if so, the reasons therefor?

The Hon. Srimathi LOURDHAMMAL SIMON : (*a*) Yes, Sir.

(*b*) Under the Madras City Municipal Act, 1919, the power of disposal of any Corporation property and interests therein is vested in the Commissioner subject to the sanction of the council or the standing committee, as the case may be. As an *ad hoc* committee was reported to have exercised the power of the Commissioner vested in him under the Madras City Municipal Act, a report was called for from the Commissioner, Corporation of Madras. His report has been received and is being examined by the Government.

Vidwan T. MUTHUKANNAPPAN : சென்னை நகராண்மைக் கழகத்தில் நிர்வாகப் பொறுப்பை வகிக்கும் ஒரு கட்சியினர் தமது சொந்தக்காரர்களுக்கும் தமக்குமே வீடுகளைப் பங்கிட்டுக் கொண்டார்கள் என்பது உண்மையா ? அதைப்பற்றிப்புகார் ஏதாவது அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ?

The Hon. Srimathi LOURDHAMMAL SIMON: அதுபற்றிய கேள்வி இதில் எழவில்லை.

* * * *

Mr. CHAIRMAN : Questions are over.

---

* Expunged as ordered by the Chair.